(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 53.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 செப்தெம்பர் 05 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசநாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லசஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரைக்கு இணங்க உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உற்படுத்தப்பட்ட 'உண்ணாட்டரசிறை (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது என்பதை நாடாளுமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பில் வழங்கப்பட்ட விடயங்களின் பிரகாரம், இந்த சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடுகள் எதுவும் அரசியலமைப்பின் 12 வது உறுப்புரை அல்லது அரசியலமைப்பின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளுக்கு முரணாக இல்லை என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, இச்சட்டமூலம் பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டப்பூர்வமாக நிறைவேற்ற முடியும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

**II**

"பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார, கௌரவ எஸ். பீ. திசாநாயக்க மற்றும் கௌரவ தம்மிக்க பெரேரா பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிலிருந்து இராஜினாமா செய்தமையினால் அக்குழுவில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ நிமல் லான்சா, கௌரவ நாலக பண்டார கோட்டேகொட மற்றும் கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக அக்குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 130(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2023 செப்தெம்பர் 01 ஆம் திகதி தெரிவுக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்."

**III**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட அவர்கள் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிலிருந்து இராஜினாமா செய்தமையினால் அக்குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

அக்குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 130(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2023 செப்தெம்பர் 01 ஆம் திகதி தெரிவுக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்."

**IV**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய அவர்களால் 2023 யூலை 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம்."

**V**

"பாராளுமன்றச் சபை முதல்வர் கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த அவர்களால் 2023 ஆகஸ்ட் 25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம்."

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை இராணுவத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை கடற்படையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(iii) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை கடலோர காவல் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவினதும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளினதும் கலந்தாலோசனையுடன், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 02 ஆம் திகதிய 2334/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தொழில்நுட்பக் கல்வி, மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 24(1) (ஞ),(ட) மற்றும் (ண) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 64(2)(ஊ) ஆம் பிரிவு, 23அ, 23ஆ, 23இ, 23ஈ மற்றும் 28(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 64(1) ஆம் பிரிவு, 24(1) ஆம் பிரிவு, 3அ ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (5) மற்றும் 6 ஆம் மற்றும் 64 ஆம் பிரிவுகள், 3(4) ஆம் பிரிவு மற்றும் 64 ஆம் பிரிவு மற்றும் 58 ஆம் மற்றும் 59 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 64 ஆம் பிரிவின் கீழ், வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு

அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய 2346/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர், 1995 ஆம் ஆண்டுக்கான 35 ஆம் இலக்க, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 4(1)(ஊ) ஆம் பிரிவின் கீழ், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 2294/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலைச் சமர்ப்பித்து அவ்வறிவித்தல் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் “தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக வரிவிதிப்பின் ஒழுங்குமுறைப்படுத்துகை” தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ மயந்த திசாநாயக்க சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஆயுள்வேதம் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) அம்பலந்தொட்ட, ரன்கிரி விகாரை வீதி, 24/2-24/3 இல் வதியும் திரு. டி. முனிதாச மென்டிஸினது 2023.02.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி சமர்ப்பித்தார்.

(2) (i) கெபிதிகொல்லாவே, ஹந்தவல வீதி, இல. 108 இல் வதியும் திரு. எச்.எம்.ஏ. ஹேரத்தினது 2023.06.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) தம்புத்தேகம, எச்.என்.பீ. வங்கிக்கு முன்னால் எனும் முகவரியில் வதியும் திரு. திலிப் திசாநாயக்கவினது 2023.07.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ எச். நந்தசேன சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. குடியியல் வான்செலவு (திருத்தம்):** துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2023 செப்தெம்பர் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** “வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்” எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன பிரேரித்தார். கௌரவ அகில எல்லாவலஅனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. ஆயுள்வேதம் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 12.06 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்குவாராக” சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.07 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

“கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக தலைமை தாங்குவாராக” கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர முன்மொழிய அதனை கௌரவ வாசுதேவ நாணாயக்கார வழிமொழிந்தார்

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.14 மணிக்கு கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்குவாராக” சுகாதார அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.12 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என சுகாதார சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 5 முதல் 28 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, சட்டத்துக்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுள்வேதச் சட்டத்தின் விரிவுப்பெயரானது "ஆயுள்வேத வைத்தியசாலைகள்," என்னும் சொற்களிலிருந்து தொடங்கி, "வைத்தியசாலைச் சபையினைத் தாபிப்பதற்கும்" என்னும் சொற்கள் வரையிலான சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

ஆயுள் வேத வைத்தியசாலைகள் ஆயுள் வேத **வாகடக,** ஆயுள்வேத மருந்தகங்கள், ஆயுள்வேத களஞ்சியங்கள், மூலிகைப் பயிர்ச்செய்கைகள் மற்றும் ஆராய்ச்சிக்கும் விரிவாக்கலுக்குமான மூலிகைத் தோட்டங்கள் என்பவற்றைப் பதிவுசெய்வதற்கும் ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்கள், ஆயுள்வேத வாகடகர்கள், ஆயுள்வேத தாதியர்கள் மற்றும் ஆயுள்வேத மர்த்தன சிகிச்சையாளர் என்போரைப் பதிவுசெய்வதற்கும்; மற்றும் அவர்களின் உயர்தொழில்சார் நடத்தையுடன் தொடர்புடைய

> கருமங்களைக் கையாள்வதற்குமான ஆயுள்வேத மருத்துவப் பேரவையொன்றைத் தாபிப்பதற்கும்; திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், பட்டங்கள் மற்றும் பட்டப்பின்படிப்புப் பட்டங்களை வழங்குதல் தொடர்பாகவும் மற்றும் ஆயுள்வேதத்திலான கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாகவுமுள்ள குறித்தசில பணிகளை நிறைவேற்றுவதற்கும் ஆயுள்வேத தேசிய வைத்தியசாலை, ஆயுள்வேத போதனா வைத்தியசாலைகள், ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகள் அத்துடன் அவற்றுடன் இணைக்கப்பட்ட வாகடகங்கள், மூலிகையகங்கள் மற்றும் மருந்தகங்கள் தொடர்பான கருமங்களைக் கையாள்வதற்கும் ஆயுள்வேத கல்வி மற்றும் வைத்தியசாலைச் சபையொன்றைத் தாபிப்பதற்கும்;".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 1 முதல் 15 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 1 ஆம் பக்கத்தில் 21 ஆம் மற்றும் 22 ஆம் ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன திருத்தத்தமொன்றைப் பிரேரித்தார்:-

> "ආරෝග්‍යශාලා මණ්ඩලයක් පිහිටුවීම සඳහා; ජාතික ආයුර්වේද රෝහල, ආයුර්වේද ශික්ෂණ රෝහල් ආයුර්වේද පර්යේෂණ"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் 3

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 2 ஆம் பக்கத்தில் 34 மற்றம் 35 வரையிலான நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன திருத்தத்தமொன்றைப் பிரேரித்தார்:-

> "ආයුර්වේදය හෙද සේවකයන්ට", "ජාතික ආයුර්වේදය රෝහලට" සහ "ආයුර්වේද පර්යේෂණ කමිටුවට"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 2 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன மேலுமொரு திருத்தத்தமொன்றைப் பிரேரித்தார்:-

> "වෙනුවට පිළිවෙළින්, ආයුර්වේද අධ්‍යක්ෂ ජනරාල්වරයා"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் 4

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 3 ஆம் பக்கத்தில் 14 மற்றும் 15 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன திருத்தத்தமொன்றைப் பிரேரித்தார்:-

''අතිරේක ආයුර්වේද අධ්‍යක්ෂ ජනරාල්වරු, ආයුර්වේද අධ්‍යක්ෂවරු, වන වචන''

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 3 ஆம் பக்கத்தில் 24 மற்றும் 25 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன திருத்தத்தமொன்றைப் பிரேரித்தார்:-

''අධ්‍යක්ෂ ජනරාල්වරයා, ආයුර්වේද අධ්‍යක්ෂකවරු, නියෝජ්‍ය ආයුර්වේද අධ්‍යක්ෂකවරු යන වචන ආදේශ කිරීමෙන් ඒ''

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 23 முதல் 28 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"(அ) ஆயுள்வேதத்திற்கிணங்க-

(i) நோய்களின் சிகிச்சைக்காக அவசியமான தாபனங்கள் மற்றும் சேவைகள்; அத்துடன்

(ii) முதனிலை உடநலக் கவனிப்பு என்பவற்றை,

வழங்குதலும்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் பக்கத்தில் 9 ஆம் மற்றும் 10 ஆம் வரிகளை நீக்கிவிடுமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

''ஆராய்ச்சிக்கும் விரிவாக்கலுக்குமான எவையேனும் மூலிகைத் தோட்டங்களை; "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 4 ஆம் பக்கத்தில் 4 மற்றும் 5 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன திருத்தத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"වෛද්‍ය පශ්චාත් උපාධි සහ සම්බාහන පුහුණු පාඨමාලා හැදෑරීම හා පර්යේෂණ, ප්‍රකාශන පලකිරීම් සඳහා පැවැති එවැනි ආයතන හා පුද්ගලයන්ට"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 4 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"මෙම පනත යටතේ ස්ථාපනය කරන"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 4 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ඉ) ඖෂධ ලියාපදිංචිය හා නියාමනය මඟින් නිෂ්පාදනය, ගෙන්වීම බෙදාහැරීම, ගබඩා කිරීම සහ වගා කිරීම මඟින් ඖෂධ කළමනාකරණය කිරීම;"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 4 ஆம் பக்கத்தில் 17 முதல் 20 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ඊ) ආයුර්වේද සෞඛ්‍ය සේවා සපයන වෘත්තිකයන් ලියාපදිංචිය, වෘත්තීය කටයුතු හා ක්‍රියාකාරකම් නියාමනය හා අධීක්ෂණය කිරීම මඟින්" ඉහළ වෘත්තීය ප්‍රමිති සහතික කිරීම;"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 4 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(උ) වෛද්‍ය අධ්‍යාපනය සම්බන්ධව හා අනෙකුත් සහායක සේවා සම්බන්ධව විශ්ව විද්‍යාල ආයතන සහ රජයේ අනුමත වෙනත් ආයතන වෙත එහි උගන්වනු ලබන පාඨමාලා, ආයතන පහසුකම් හා මානව සම්පත් පිළිබඳ කලින් කලට නිර්ණායක, උපමාණ හා උපදෙස් ලබාදීම මඟින් ගුණාත්මක තත්ත්වයේ ඉහළ වෘත්තිකයන් පිරිසක් බිහි කිරීම සහ"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் வாசகம்

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 5 ஆம் பக்கத்தில் 1 முதல் 12 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன திருத்தத்தமொன்றைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் வாசகம்

6 ஆம் பக்கத்தில் 27 முதல் 31 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> 9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-
>
> (1) "ஏழாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதில், ஆணையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணையாளர் தலைமையதிபதி, 7 ஆம் பிரிவின் (அ) முதல் (உ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கானதத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்வதில், ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்
>
> (2) "ஆயுள்வேத வைத்தியசாலைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயுள்வேத வைத்தியசாலைகள், ஆராய்ச்சிக்கும் விரிவாக்கல் சேவைகளுக்குமான மூலிகைத் தோட்டங்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.; "

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 5 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன திருத்தத்தமொன்றைப் பிரேரித்தார்:-

> “(අ) ප්‍රධාන ප්‍රඥප්තියේ 7වන වගන්තියට ඉණික්බිතිව පහත දැක්වෙන අලුත් වගන්තිය ඇතුළත් කරනු ලබන අතර, එය ප්‍රධාන ප්‍රඥප්තියේ 7අ වගන්තිය ලෙස බලාත්මක විය යුතුය:-
>
> 7(අ) (1) ඒකාබද්ධ අරමුදලින් වරින් වර ප්‍රදානය කරනු ලබන මුදල්, පනතේ අරමුණු ක්‍රියාත්මක කිරීම සඳහා යොදා ගත යුතුය.
>
> (2) පනතේ නිශ්චිතව දක්වා ඇති අරමුණු ඉටු කිරීමේදි සහ දෙපාතර්මේන්තුවේ කර් තව්‍ය ඉටු කිරීමේදී ගාස්තු හෝ වෙනත් යම් ආකාරයකින් ලැබෙන්නා වූ අයකර ගන්නා වූ හෝ රැස්කරන්නා වූ සියලු මුදල්, ඒකාබද්ධ අරමුදලට බැර කළ යුතුය.”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 2 முதல் 5 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "ஆயுள்வேத வைத்தியசாலைகள்," என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, "ஆயுள்வேத வைத்தியசாலைகள், மூலிகைப் பயிர்ச்செய்கை," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) "ஆயுள்வேத வைத்தியசாலைகள்," என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, "ஆயுள்வேத வைத்தியசாலைகள், மூலிகைப் பயிர்ச்செய்கை," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) "வைத்தியசாலை" என்னும் சொல் தோன்றுமிடங்களிலெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக, "வைத்தியசாலைகள், மூலிகைப் பயிர்ச்செய்கை," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 5 ஆம் பக்கத்தில் 19 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ (டாக்டர்) ராஜித திருத்தத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"ආයුර්වේද රෝහල් ඔසු වගා, ආයුර්වේද ඔසු සල් යන වචන ආදේශ කිරීමෙන් ඒ"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 21 முதல் 29 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(இ) ஐந்து உறுப்பினர்கள்; அவர்களுள்-

(i) இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் ஆயுள்வேத மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களும் சிரேட்ட விரிவுரையாளர் களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமான இருவர்;

(ii) இலங்கை, கம்பஹா விக்கிரமாராச்சிசுதேச மருத்துவப் பல்கலைக் கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் சிரேட்ட விரிவுரையாளர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்;

(iii) இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் சிரேட்ட விரிவுரையாளர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்; அத்துடன்

(iv) இலங்கை, கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்தின் சிரேட்ட விரிவுரையாளர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்; ";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் பக்கத்தில் 1முதல் 3 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் பக்கத்தில் 4 முதல் 11 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

‘‘(3) அதன் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஊ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பன்னிரெண்டுக்கு மேற்படாத உறுப்பினர்கள்; அவர்களுள்-

"(i) மூவர் ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களாகப் பதிவுசெய்யப்பட்டிராத ஆட்களுக்கிடையேயிருந்து அவ்வாறு நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ii) மூவர், அகில இலங்கை ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களின் காங்கிரஸினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பத்துப் பேர்களைக் கொண்ட குழாமொன்றிலிருந்து அவ்வாறு நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(iii) இருவர், அகில இலங்கை ஆயுள்வேத மருத்துவத்தொழிலர்களின் காங்கிரஸின் உறுப்பினர்களாகவிராத பதிவுபெற்ற ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களிடையேயிருந்து அவ்வாறு நியமிக்கப்படுதல் வேண்டும்! அத்துடன்";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

